'ஆம்' என்று பதில் கொடுத்தார்கள். நன்றி. இப்போது குடிசைகளில் இருக்கிறவர்கள் அதிகமாக இருப்பதால் புதிதாக வீடுகள் கட்டும் திட்டம் உள்ளதா?

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வீடுகள் தொடர்ந்து கட்டிக் கொண்டுதான் இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் 13 கேள்விகள் இருக்கின்றன. எதையும் நிறுத்த வேண்டாம் என்பதற்காக ஒவ்வொருவருக்கும் ஒரு துணைக் கேள்வி கேட்க அனுமதிக் கிறேன்.

உடல் ஊனமுற்றவர்களுக்கு பயிற்சி அளிக்க தொழில் பயிற்சி நிலையம்.

72—*(வினா எண். 6690) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் :** (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் ஊனமுற்றவர்களுக்கு பயிற்சி அளிக்க தனித் தொழிற்பயிற்சி நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) உடல் ஊனமுற்றவர் களுக்கு பயிற்சி அளிக்க தனி தொழிற் பயிற்சி நிலையம் ஏற் படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண் பார்வை அற்றவர்கள் போன்றவர்கள் மற்ற மாணவர்களுடன் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றது. எனவே தற்போது பரிசீலனையில் இல்லாமல் இருந்தாலும் கூட இப்படி உடல் ஊனமுற்றவர்கள், கண்பார்வை யற்றவர்கள் போன்றவர்களுக்கு என்று அவர்கள் செய்கின்ற தொழிலிலே பயிற்சி பெறுவதற்கான ஒரு பயிற்சி நிலையத்தை உருவாக்க இனிமேலாவது அரசு பரிசீலிக்குமா?

1987 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிண்டியில் பார்வை அற்றவர்களுக்காக இயங்கி வந்த எளிய பொறியியல் பயிற்சி திட்டம் 1982-லிருந்து பார்வை அற்றோர் தொழிற்பயிற்சி நிலையமாக உயர்த்தப்பட்டு கீழ்க்கண்ட பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகின்றன. அதிலே, பொருத்துநர் மற்றும் அடிப்படை இயந்திர இயக்குநர், ஓராண்டு காலப்பயிற்சி, புத்தகம் கட்டுபவர் ஓராண்டு காலப் பயிற்சி, மின்கம்பி சுற்றுபவர் 6 மாத காலப் பயிற்சி என்று தற்போது வழங்கப்பட்டு வருகிறது. அதோடுமட்டுமல்லாமல், கிண்டி தொழில் பயிற்சி நிலையத்தில் 1984 ஆம் ஆண்டு முதல் காது கேளாத 16 நபர்களுக்கு 2 ஆண்டுகள் பொருத்துநர் பிரிவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேற்படி கிண்டி தொழில் பயிற்சி நிலையத்தில் இடைநிலைப் பிரிவு ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தா. பழூர் ஒன்றியத்தில் புதிதாக சத்துணவு மையம்

73—*(வினா எண் 11274)— டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும்கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதி, தா. பழூர் ஒன்றியத்தில் அம்பலவர் கட்டளை, ஆலவாய், கார்குடி, அமிர்தராசன் கோட்டை, படுக்கல், அண்ணங்கான் பேட்டை ஆகிய கிராமங்களுக்கு புதியாக சத்துணவு மையம் துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

கரந்தமலையூரில் சத்துணவு திட்ட மையம்.

74— *(வினா எண் 11821)— திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம், மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம், நத்தம் தொகுதி, குட்டுப்பட்டி பஞ்சாயத்து கரந்தமலையூரில் சத்துணவு திட்ட மையம் அமைத்துத் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு மலையூர், புதூர், வலசை ஆகிய 3 ஊர்களும் மலை உச்சியில் இருக்கின்றன. நூறு குழந்தைகளுக்கு